02.07.2026. O.S.No.108 of 2025 P.W.1 - Arthi

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

வழக்கில் உள்ள சங்கதிகள் மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் என்ன என்றால் அம்மா எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார், அப்பாவும் அண்ணனும் அவர்கள் பெயரில் எனக்கு தெரியாமல் பதிவு செய்து கொண்டார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

அலமேலு அம்மாள் என் தாயார் இல்லை என் அப்பாவின் முதல் மனைவி ஆவார். என் அப்பா பெயர் மோகன், அவர் மற்றொரு பெயர் இக்பால் பாருக். மோகன் எப்படி இக்பால் பாருக் ஆனார் என்றால் அவர் மதம் மாறிவிட்டார். அலமேலு அம்மாவிற்கும் மோகன் என்ற இக்பால் பாருக்கும் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான்.மோகன் என்ற இக்பால் பாருக் என்பவர் முதன்முதலில் மோகன் என்ற பெயரில் தான் பாஸ்போட் எடுத்து துபாய் சென்று அதன் பிறகு இந்தியா வந்து அதற்கு பின்னிட்டு தான் இக்பால் பாருக் என்று பெயர் மாற்றி கொண்டு மதம் மாறி கொண்டார். அவர் சுமார் 40 ஆண்டுகள் வெளிநாட்டில் வேலை செய்து வந்தார். அவர் தற்போது இந்தியா வந்துவிட்டார். தற்போது அவருக்கு வயது தோராயமாக 75 இருக்கும்.

அலமேலு அம்மாவிற்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் போடுவார். எழுத படிக்க தெரியாது. அவர் ஆங்கிலத்தில் கையொப்பமிடுவாரா அல்லது தமிழில் கையொப்பமிடுவாரா என்றால் தமிழில் மட்டும் கையொப்பமிடுவார். அலமேலு அம்மாள் வேறு வேலை செய்து வருமானம் வந்ததா என்றால் இல்லை அவர் தனியார் பள்ளியில் ஆயம்மா வேலை சம்பளத்திற்கு செய்தார். VKVM CBSE பள்ளி வேலூரில் வேலை செய்தார். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை வேலை செய்தார் என்றால் தெரியாது.அப்போது நான் பிறக்கவே இல்லை. (மேற்கண்ட கேள்விக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது காரணம் எதிர் வழக்குரையில் அது குறித்து சொல்லவில்லை என்று ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்படுகிறது.)

அலமேலு அம்மாள் தனியார் பள்ளியில் வேலை செய்து அவருக்கு வருவாய் வந்ததாக எந்த விதமான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அலமேலு அம்மாள் பெயரில் உள்ள சொத்து மோகன் என்கிற இக்பால் பாருக் என்பவர் தான் சம்பாதித்து சொத்து வாங்கிவிட்டார் என்றால் சரியல்ல.

என் அம்மா பெயர் தாரா. அவருக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் வேறு பெயர் இல்லை. அலமேலு அம்மாவிற்கு குழந்தை இல்லாததால் என் தாயாரை திருமணம் செய்து கொண்டு 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள் பிறந்ததாக என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் 2 மகள்கள் 1 மகன் என்று சொல்லியுள்ளேன்.

1992, 1989 ஆண்டுகளில் அலமேலு அம்மாள் பெயரில் உள்ள அசல் கிரய பத்திரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் உடன் பிறந்த அக்கா பெயர் மாலினி தேவி மற்றும் என் அண்ணன் பெயர் வினோத் குமார். வினோத்குமாரும் மதம்(முஸ்லீம்) மாறிவிட்டார். அவர் பெயர் சுலைமான். என் பெற்றொர்கள் முஸ்லீம் மத வழக்கம் படி சுலைமானுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல.

என் அக்கா, தாய்மாமாவை(தாயார் தாராவின் தம்பி) திருமணம் செய்து கொண்டார். நான் காதல் திருமணம் செய்து கொண்டேனா என்றால் அம்மாவின் சம்மதத்தோடு செந்தில் என்பவரை திருமணம் செய்துகொண்டேன். அப்பா வெளிநாட்டில் இருந்தார். என் திருமணம் வேலூரில் ஈஸ்வரன் கோவிலில் நடந்தது. நான் திருமணத்திற்கு பிறகு வெளியூரில் வாழ்க்கை நடத்தினேனா என்றால் இல்லை வேலூரில் தான் வாழ்க்கை நடத்துகிறேன். சேலத்தில் எத்தனை வருடங்கள் வசித்தேன் என்றால் அங்கு வசிக்கவில்லை அங்கு போவேன் வருவேன். நான் சொல்வது தவறு என்றும் நான் சேலத்தில் 2 ஆண்டு காலம் வசித்து வந்தேன் என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதம் முன்பு தான் வேலூர் வந்தேன் என்றால் சரியல்ல.

தாவா A அட்டவணை சொத்தில் 2 போர்ஷன் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு போர்ஷனில் அலமேலு அம்மாளும் மற்றொரு போர்ஷனில் என் தாயாரும் நாங்களும் இருந்தோம் என்றால் சரியல்ல, எல்லோரும் ஒன்றாக தான் இருந்தோம். வா.த.சா.ஆ. 10 ஆவணத்தில்

சைடு போர்ஷன்(Side Portion) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எல்லாரும் ஒரே வீட்டில் தான் இருந்தோம் அனைவருக்கும் ஒரு விலாசம் தான்.

நான் அலமேலு அம்மாவுடன் தனியாக வசித்து வந்தேனா என்றால் நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் வசித்து வந்தோம். என் பெயரில் தனிப்பட்ட பாசம் அலமேலு அம்மாவிற்கு இருந்ததால் உயில் எழுதி வைத்தார். உயில் சாசனம் யார் எங்கு எப்போது டைப் செய்தார்கள், யார் எழுதினார்கள், யார் சொல்ல எழுதினார்கள் என்றால் எழுதியது எனக்கு தெரியாது, என்னிடம் கொடுத்தார்கள். என்னிடம் அலமேலு அம்மா தான் கொடுத்தார்.

அலமேலு அம்மா எந்த வருடம் தேதி, மாதத்தில் கொடுத்தார் என்றால் என்னிடம் பத்திரமாக வைத்து கொள் என்று கொடுத்தார். ஆனால் எப்போது கொடுத்தார் என்று நினைவில்லை. அவர் இறந்தது 2021 ஆம் ஆண்டு. அலமேலு அம்மாள் இந்த ஒரு ஆவணம் மட்டும் என்னிடம் கொடுத்தாரா அல்லது வேறு ஆவணம் எதாவது கொடுத்தாரா என்றால் உயில் மட்டும் தான் என்னிடம் கொடுத்தார்.

சாட்சி கையெழுத்து போட்டுள்ள 2 சாட்சிகளையும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தாரா என்பவரை தெரியும் அவர் என் தாயார். மற்றொருவர் பெயர் எனக்கு தெரியவில்லை. தாரா என்னுடன் தான் தங்கியுள்ளார் என்றால் சரிதான். சுலைமான் மற்றும் சுலைமானின் அப்பா மற்றும் சுலைமானின் மனைவி ஆகியோர்கள் ஒரு போர்ஷனில் தங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். என் அக்கா மாலினி தேவி ஆற்காட்டில் வசித்து வருகிறார்.

நான், என் கணவர், குழந்தைகள், என் தாயார் ஆகியோர்கள் ஒரு போர்ஷனில் வசிக்கிறோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணம் எப்போது யாரால் எங்கு எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்பதால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என் தாயார் சாட்சியமாக இருப்பதால் அவருடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. என் தாயார் என்னுடன் வசித்து வருகிறார் என்றும் உயில் சாசனம் உள்நோக்கத்தோடு வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

அலமேலு அம்மாள் இறந்தது 16.05.2021. உயில் சாசனம் உண்மையாக இருந்திருந்தால் 2021 ஆம் ஆண்டு அலமேலு அம்மாள் இறந்தபிறகு வருவாய் துறை ஆவணத்தில் என் பெயருக்கு மாற்றம் செய்திருப்பேன் என்றால் நான் வருவாய் துறை ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் உயிலை பழைய தேதியிட்டு முன் யோசனையுடன் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வா.த.சா.ஆ.3- Blue print ஆவணம் அலமேலு அம்மாளால் தான் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு நேரடியாக தெரியாது. அப்போது நான் சிறிய குழந்தை. அலமேலு அம்மாவிற்கு கையெழுத்தே போட தெரியாது என்றும் கைநாட்டு தான் வைப்பார் என்றால் அவர் கையெழுத்து போடுவார்.

வழக்கு சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்று வாங்கி பார்த்தேனா என்றால் வாங்கி பார்த்தேன். வழக்கு சொத்தை குறித்து

அலமேலு அம்மாள் ஒரு கிரய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றும் அதில் அவர் கைநாட்டு தான் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீது, அலமேலு அம்மாள் பெயரில் இருந்தது. தற்போது பிரதிவாதி பெயரில் கிரயம் பெற்றதால் அவர் பெயரில் உள்ளது. கேஸ் ரசீது என் பெயரில் உள்ளது.

வில்லங்கம் வாங்கி பார்த்தபோது தான் 2 வது பிரதிவாதி 1 வது பிரதிவாதி பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து கிரயம் ஏற்படுத்தி கொடுத்த விவரம் தெரியவந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அலமேலு அம்மாளுக்கும் மோகன் என்பவருக்கும் குழந்தைகள் இல்லாததால் அலமேலு அம்மாள் இறந்த பிறகு ஒரே வாரிசு என்ற முறையில் 2 வது பிரதிவாதி 1 வது பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றும் அந்த பத்திரம் செல்லத்தக்கது என்றும் அவருக்கு பத்திரம் எழுதி கொடுக்க எல்லா உரிமையும் உள்ளது என்றால் அதற்கு முன்பே எனக்கு உயில் எழுதிவிட்டார்.

வழக்கு சொத்தில் உரிமை கோர எனக்கு எந்தவித உரிமையும் என்றும் அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டியது என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.02 16:55:59 +0530